**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎவ்ஏரீஎம்) எச்ஐவீ/எயிட்ஸ் புதிய நிதியிடல் மாதிரிக் கூறு - 2016**

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் எச்ஐவீ/எயிட்ஸ் கூறின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎவ்ஏரீஎம்) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 நவம்பர் 26 ஆம் திகதிய 977-எல்கேஏ-எச்-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகளிற்குப் பொறுப்பாக உள்ளது. இலங்கையில் எச்ஐவீ/எயிட்ஸ் இனை தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சையளித்தல் என்பவற்றிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். புதிய நிதியிடல் மாதிரிக்கான எச்ஐவீ/எயிட்ஸின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 5,323,102 தொகையானதுடன் முழுத் தொகையையும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் கீழான அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின்

வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நிதியளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

#### முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகள் கொண்டிருந்த தகவல்களுடன் நிதிக்கூற்றுக்களிலுள்ள தகவல்கள் இணங்குகின்றன என்றும், மற்றும்

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 176.09 மில்லியன் தொகையானதுடன் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வகுதி | 2016 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட செலவினம் | |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 59,415 | 23,567,844 |
| எச்ஐவீ/எயிட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 1,045,856 | 152,517,188 |
| | **1,105,271** | **176,085,032** |

#### 2.2.2 காசுப்பாய்ச்சல் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| | 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வெளிநாட்டு உதவி – மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 627,442 | 91,500,000 |
| உள்நாட்டு மூலங்களிலிருந்தான பெறுகைகள் | 89,145 | 13,000,000 |
| உலகலாவிய நிதியத்திலிருந்தான நேரடிப் பணவளிப்புக்கள் | 407,557 | 59,434,020 |
| ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட காசு | 288 | 42,000 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் | (1,045,856) | (152,517,188) |
| **ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை)** | **75,029** | **10,941,504** |
| பெறுமானத்தேய்வு | 77,656 | 11,324,518 |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 7,526 | 1,268,821 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்களில் குறைவு | 224 | 33,000 |
| வெளிநாட்டுப் பரிமாற்ற நட்டம் | (1,020) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **(159,415)** | **(23,567,844)** |
| நிலையான சொத்துக்கள் | (159,415) | (23,567,844) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(159,415)** | **(23,567,844)** |
| மீளளிக்கப்பட்ட காசு | (3,547) | (517,328) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(3,547)** | **(517,328)** |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | இல்லை | இல்லை |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடு

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் எச்ஐவீ/எயிட்ஸ் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் நடவடிக்கைகள் 2016 சனவரி 01 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னைய செயற்திட்டத்தால் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 69.99 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன செயற்திட்டதின் சொத்துக்களாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | 2016 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| ----------- | ----------------------------------- | | -------------------------- | -------------------------------- | | -------------------------------- | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஎவ்ஏரீஎம் | 5.32 | 707.56 | 2.50 | 1.03 | 150.42 | 0.91 | 132.9 |

மேற்படி தகவல்களின் பிரகாரம் கூறிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 707.56 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.32 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 132.9 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.91 மில்லியன் மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வுக் காலப்பகுதிக்காக 93 நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 143.29 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் விபரமான பாதீட்டில் குறிப்பிடப்பட்டவாறு உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக ஏனைய 34 நடவடிக்கைகளிற்காக பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 72.77 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீட்டில் ரூபா 11.29 மில்லியன் தொகை மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டக் காலப்பகுதியினுள் மொத்த ஒதுக்கீட்டையும் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை அவற்றின் மீது துரித நடவடிக்கை எடுக்கப்படும் வரை மிகவும் தொலைவாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

10 தன்னியக்க மைக்கிறோ பிளேட் எலிசா றீடர் வோஷர் இயந்திரங்கள் (Automatic Micro Plate Elisa Reader Washer Machine) ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளப்படாமலும் ரூபா 14.85 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. Sectually transmitted diseases நிலையங்களிற்கு வழங்கப்பட்ட 07 இயந்திரங்கள் 2017 யூலை 03 வரை விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

கணக்காய்வின் போது பின்வரும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உப கட்டுநிதிகளிற்கான ரூபா 100,000 எல்லையை விஞ்சி 24 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 8.31 மில்லியன் கூட்டுமொத்தமான உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஏனைய 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 93,301 கூட்டுமொத்தமான செலவிடப்படாத உப கட்டுநிதி மீதிகள் உரிய நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக செலுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும் 24 நாட்கள் தொடக்கம் 97 நாட்கள் வரையான வீச்சிலான தாமதங்களுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 35,676 கூட்டுமொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் உரிய நோக்கங்களிற்கு செலவிடப்பட்டிருக்காததுடன் 11 நாட்கள் தொடக்கம் 16 நாட்கள் வரையான தாமதமொன்றுடன் அவை தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான வருடாந்தம் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்காக செயற்திட்டத்தால் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தால் நிறுவனங்களிற்கு மாற்றப்பட்ட சொத்துக்களை பயன்படுத்துதல் தொடர்பான செயன்முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவிலிருந்து செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவப் பொருட்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.89 மில்லியன் தொகை மீள்நிரப்பப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் சான்றுறுதிப்படுத்தல் மற்றும் பொருட்களை பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றிற்கான சான்றுகள் கணக்காய்விற்காக பெறப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

------------------------------------------------------------

வெளிநாட்டு முகவர் ஒருவரிடமிருந்து 2016 செப்தெம்பர் 21 இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 145,026 பெறுமதியான 6,120,000 Male condoms அலகுகளில் 1,152,000 Male condoms அலகுகள் இடந்தவறியிருந்தன என அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இவ்விடயம் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.